# திராவிட சினிமா

15

**■ வீ.மா.ச.சுபகுணராஜன்**

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்







## மருதநாட்டு இளவரசி

# ‘ஸ்கிரிப்ட் டாக்டர்’ கலைஞர்!

தமிழ்த் திரையுலகின் பல முன்னோடி நடவடிக்கைகளைத் தனது உள்ளார்ந்த கலைநயத்தால் முதன்முதலாகச் செய்தவர் கலைஞர். திரைத்துறையில், குறிப்பாக மேலைநாட்டு (ஹாலிவுட்) படங்களின் உருவாக்கத்தில், மிக முக்கியமாகக் கருதப்படுவது, திரைக்கதை அமைப்பை ஆய்ந்து அதனைச் செழுமைப்படுத்தும் பணி.

இந்தத் திரைச் செயல்பாட்டை ஆங்கிலத்தில் **‘ஸ்கிரிப்ட் டாக்டரிங்’** *(Script Doctoring)* என்று குறிப்பிடுவார்கள். மிகச் சமீபகாலமாக தமிழ்த் திரையுலகில் பிரபலமாக அறியப்படுகிறது இந்த நுட்பம். அந்தத் துறை விற்பன்னர்கள் தனித் துறையாகவே செயல்படுகிறார்கள். கலைஞர் இதனை அவரது கலைப் பயணத்தின் ஆரம்ப நாட்களிலேயே செய்து சாதித்தார்.

இதோ கலைஞர் அந்தச் சூழல் குறித்து எழுதுகிறார்: **‘ராஜகுமாரி’, ‘மந்திரிகுமாரி’** – இரண்டு படங்களுக்கும் இடையில் **‘மருதநாட்டு இளவரசி’** என்ற படத்தை ராஜபாளையத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் எடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் படம் கால் பகுதிகூட எடுக்கப்படாமல் இருந்தது. அந்தப் படத்தைத் தொடர்ந்து எடுப்பது என்றும், அதில் எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருந்த காரணத்தினால், நான் வசனம் எழுதவேண்டும் என்றும் என்னிடத்தில் சொன்னார்கள்.

கதையை முழுமையாகப் படித்துவிட்டு முழுவதுமாக மாற்ற வேண்டும் என்று சொன்னதற்குச் சம்மதித்தார்கள். சென்னையில் எவரெஸ்ட் ஹோட்டலுக்கு எதிராக உள்ள நாடார் மேன்சனில் பதினைந்து நாட்கள் தங்கி, திரைக்கதையையும் வசனத்தையும் எழுதிக் கொடுத்தேன். அந்தப் படத்தை ஏ.காசிலிங்கம் இயக்கினார். ‘மருதநாட்டு இளவரசி’ படத்தில் நடித்தபோதுதான் எம்.ஜி.ஆர் – வி.என்.ஜானகி நட்பு நெருக்கமாயிற்று. ‘மருதநாட்டு இளவரசி’ வசனத்திற்காகவே ஓடுகின்ற படம் என்று **‘பேசும் படம்’, ‘குண்டூசி’** போன்ற பத்திரிகைகள் விமர்சனம் எழுதியிருந்தன. இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது”. (வண்ணத்திரை 12.01.1989, 19..01.1989).

### இரண்டு நாயக அமைப்புகள்

1950–ஆம் ஆண்டில் வெளிவந்தது **‘மருதநாட்டு இளவரசி’**. தொடர முடியாமல் நின்றுபோயிருந்த படத்துக்கு உயிரூட்டி வெற்றிப் படமாக்கினார் கலைஞர். ஏற்கெனவே கண்டது போல எம்.ஜி.ஆர் எனும் வெகுகாலம், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள், துணை நடிகருக்கு தனித்துவமான நாயக பிம்பத்தை உருவாக்கி, அவரை நிலைநிறுத்தி, தமிழ்த் திரைப்படங்களின் அதிமுக்கிய அதிநாயக (Super Star) நாயகராக ஆக்கியதில் கலைஞரின் பங்கு மகத்தானது.

**‘மிருகங்களில் புலி, மானைக் கொல்கிறது. மனிதர்களிலோ மான், புலியைக் கொல்கிறது!’**

கலைஞர் எம்.ஜி.ஆருக்காக, புனைவான சரித்திரக் கதைகளில், இரண்டுவிதமான பாத்திர அமைப்புகளை உருவாக்கினார். முதல் வகை மக்களிடையே இருந்து உருவாகும் சாதாரண மனிதன். ஆனால் நாட்டு நலனுக்காக அதிகார, எதேச்சதிகார சக்திகளுக்கெதிராகப் போராடும் மாவீரன். தனது தொடர் போராட்டங்களால் தளபதி நிலைக்கு உயர்ந்து நாட்டின் இளவரசியை மணந்து கொள்வான் (ராஜகுமாரி, மந்திரிகுமாரி).

இரண்டாவது வகை தமிழ்த் திரைப்படங்கள் பொதுவான பண்பு கொண்டவைதான். அவை புராண இதிகாசப் புனைவுகளிலிருந்து பெறப்பட்ட பாத்திரம்தான். அதாவது மன்னர் மகனாகப் பிறந்து சாஸ்த்திர, சம்பிரதாய மற்றும் அதிகார போதை கொண்ட ராஜகுருவான வேதவித்துகள் மற்றும் மந்திரிகளின் சதியால் அனாதையாக்கப்பட்டு இறுதியில், தனது போராட்டத்தால் மக்கள் அங்கீகாரத்துடன் அரியணை ஏறுவான் (மருத நாட்டு இளவரசி).

இந்தப் பாத்திரங்களின் மாதிரியை சமூகக் கதைகளிலும் மாற்றியமைத்துக் கொடுத்ததும் கலைஞரே (மலைக்கள்ளன்). இவையனைத்தும் 1948–ஆம் ஆண்டு முதல் 1954–ஆம் ஆண்டு வரையான கால இடைவெளியில் வெளிவந்த மாபெரும் வெற்றிப் படங்கள். இந்தப் படங்களுக்கு இணையான வேறு வெற்றிப்படங்கள் பிறரால், எம்.ஜி.ஆருக்காக அந்தக் கால கட்டத்தில் உருவாக்கப்படவில்லை. ஆனால், இந்த மாதிரிகளைக் கொண்டே திராவிடத்துக்குச் சற்றே விலகி, தனக்கான தனிவழி அமைத்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

### கலைஞரின் முத்திரைக் காட்சி

‘ஸ்கிரிப்ட் டாக்டர்’ கலைஞரின் பங்களிப்பு, தெள்ளத் தெளிவாகத் தெரியும் ‘மருதநாட்டு இளவரசி’யில். ஏற்கெனவே உருவான படத்தின் பாத்திரங்கள் துர்ஜெயன் (தளபதி), ரௌத்திரன் (போலி இளவரசன்), காண்டீபன் (அசல் இளவரசன் – எம்.ஜி.ராம்சந்தர்) போன்றவை. ஆனால், அவர்கள் பேச்சில் வடமொழிச்சாயலற்ற தமிழ் மிளிரும். திரைக்கதையின் பிரதானப் பகுதி காதலர்கள் சந்திப்பிலேயே நகர்கிறது. அரண்மனைவாசிகளை ‘அரண்மனை மிருகம்’ எனும் காண்டீபன், காதலி ராணியை இளவரசியென அறியாமல் காதலிக்கிறான்.

கலைஞரின் ‘செய்முறைப்படி’ *(Formula)* அவளே அவனுக்கு வாள் பயிற்சி உள்ளிட்ட போர்ப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுக்கிறாள். அதாவது பெண்ணே அறிவான, வீரமான, நீதியான ஆணை உருவாக்குகிறாள். காதலர்கள் சந்திப்பின் உரையாடல்களும் ரசமானவை. ‘மிருகங்களில் புலி மானைக் கொல்கிறது. மனிதர்களிலோ மான் புலியைக் கொல்கிறது’ என்கிறான் காண்டீபன். அவனே, ‘வாள் வீச்சைப் பழிக்கும் கண் வீச்சு உன்னுடையது’ என்கிறான். அவளோ, “மிரளுகிற மான் என்ன உறுமுகிற சிங்கமா” என்கிறாள். குறிஞ்சி நாட்டு ரௌத்திரன், “உரிமை என்ற சொல்லை இந்த நாட்டில்தான் கேள்விப்படுகிறேன்” என்கிறான். காண்டீபனோ, “வெண்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் என வீரப் பண்பாடும் தமிழ் மண் இது” என்கிறான். ராணியை அடைய அவசரம் காட்டும், ரௌத்திரனுக்கு அறிவுரை சொல்லும் துர்ஜெயன், “பூமியைத் தோண்டி பொன்னெடுத்தவன் அது ஆபரண மாவதற்குள் அவசரப்படக் கூடாது” என்கிறான். ராணியோ தன்னைத் தீண்ட நினைப்பவனை, “நான் தமிழச்சி, கண்ணகி மரபிலே வந்தவள்” என எச்சரிக்கிறாள்.

திரைப்படத்தின் அரசவை விசாரணை மன்றம், கலைஞரின் முத்திரைக் காட்சி. ரௌத்திரனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் காண்டீபன், “இது அவனுடைய (ரௌத்திரன்) ராஜ்ஜியமாகவோ அல்லது ஆண்டவனின் ராஜ்ஜியமாகவோ இருக்கட்டுமே, அநீதியை எதிர்க்க எந்தப் பிரஜைக்கும் உரிமை உண்டு. நீதிதேவனின் ஸ்தானத்தில் இருக்க வேண்டியவர்கள் இந்த மக்களே” என வாதிடுகிறான்.

அரசவையில் மக்களாலான நடுவர்கள் (ஜூரிகள்) விசாரணை நடத்துகிறார்கள்.

உண்மை வெளியாகி அரசனாகும் காண்டீபன், “குறிஞ்சி நாட்டின் மக்காள். இந்த நாட்டின் மன்னனல்ல நான். முடியாட்சி முடிந்தது. புதுக் கருத்து மலரட்டும். எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என அறிவிக்கிறான்.

...படம் விரியும்

## பயம் காட்டும் ‘இந்தியா!’

நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியை வீழ்த்துவதற்காக காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு தங்கள் கூட்டணிக்கு, ‘இந்தியா’ என்று பெயர் சூட்டியுள்ளனர். இதையடுத்து கடந்த இரண்டு நாட்களாக பா.ஜ.க. தலைமை முதற்கொண்டு அடிமட்டத் தொண்டன் வரை பதறி வருகின்றனர்.

கடந்த 9 ஆண்டுகளாக **‘ஸ்டார்ட் அப் இந்தியா’, ‘ஸ்கில் இந்தியா’, ‘மேக் இன் இந்தியா’** என்று பெயர் வைத்து, தங்களின் தேசப்பக்தியை காட்டியவர்கள் தற்போது, ‘இந்தியா என்ற பெயர் வெள்ளைக்காரன் கொடுத்தது. புராண காலத்தில் அதன் பெயர் பாரத். அதையே நாம் சொல்வோம்’ என்று அந்தர் பல்டி அடிக்கிறார்கள்.

பா.ஜ.க. தலைவர்கள் சிலர் தங்களது ட்விட்டர் கணக்குகளின் பெயரில் ‘இந்தியா’ என்றிருந்ததை மாற்றி, ‘பாரத்’ என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க. சார்பு இதழான ‘ஓப் இந்தியா’, இப்போது தன் பெயரை எப்படி மாற்றுவது என்று குழம்பிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் பா.ஜ.க. தலைவர் பியூஷ் கோயல், ‘பெயரை மாற்றுவதால், அடையாளம் மாறாது’ என்று வியாக்கியானம் சொல்ல, ‘அப்புறம் எதற்கு அலகாபாத் உள்ளிட்ட இடங்களின் பெயர்களை எல்லாம் நீங்கள் மாற்றினீர்கள்?’ என்று கேட்டு குடைச்சல் கொடுக்கிறார்கள். இன்னொருப் பக்கம், ‘இந்தியா’வுக்கு எதிராக பா.ஜ.க. கூட்டணி ‘அதானி’ என்று பெயர் வைத்துக்கொள்ளுமா என்று கேட்டு, மீம்ஸ்களை அள்ளிவிடுகிறார்கள்.

இப்போது ‘இந்தியா’ என்ற பெயரை ஏற்கவும் முடியாமல், எதிர்க்கவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறது பா.ஜ.க.

## ::ப்ளாஷ்பேக்





### படிப்பகமும் திருமணமும்!



சண்முகம்

எனது திருமணத்தைத் தலைமை யேற்று நடத்திக் கொடுப்பதற்காக, தலைவர் கலைஞரை கோபாலபுரம் இல்லத்தில், நானும் என் மாமா எம்.எஸ்.மணி அவர்களும் சந்திக்கச் சென்றோம். தலைவரிடம் அவர் என்னை அறிமுகம் செய்யும்போது, “கே.வி.கே. சாமி படிப்பகத்தை ஆரம்பித்து அதன் செயலாளராக இருந்து வருகிறார்” என்று சொன்னார். உடனே என் திருமணத்துக்கு வருவதற்கு ஒப்புக்கொண்டார் தலைவர். 1973–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற என் திருமணத்துக்கு, தலைவர் கலைஞரும், பாண்டிச்சேரி முதலமைச்சர் எம்.ஒ.எச்.பரூக் அவர்களும், அன்பில் தர்மலிங்கம் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும் வருகை தந்தனர். தி.மு.க.வைச் சேர்ந்த இரண்டு முதலமைச்சர்கள் பங்கேற்று என் திருமணத்தை இனிதே நடத்தி வைத்தனர்.

**-மு.சண்முகம், வட்ட தி.மு.க. பொருளாளர், உறையூர், திருச்சி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033 – 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞர் தொலைநோக்கு

**1996–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர், தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்துக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்தார். புதிய புதிய தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார். ஹூண்டாய், பில்கிங்டன், பியூஜிகுரா, கும்ஹாடயர் எனப் பல சர்வதேசத் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க அழைத்து வந்தார். ‘இந்தியாவின் டெட்ராய்டு’ என சென்னை பெயர் பெற்றதற்குக் காரணமாக இருந்தவர் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 185




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.